Maalai Malar

மாலை மலர்

17-03-2011

Page # 4

# வேலை வாய்ப்பு கண்காட்சி

சென்னை, மார்ச். 17–

பெண்களுக்கான பிரத்தியேக வேலை வாய்ப்பு கண்காட்சி வருகிற 19–ந் தேதி (சனிக்கிழமை) சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள லைட் அரங்கில் நடக்கிறது. இந்த கண்காட்சியில் பங்கேற்க விரும்புபவர்கள் www.avtariwin.com/womanjobfair என்ற இணைய தளம் வழியாக தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் வேலை தேடி வருபவர்கள் அனுமதிக்கப் படுவார்கள். இந்த கண்காட்சியை அக்சென்சர், சதர்லேண்ட் நிறுவனங்கள் நடத்துகின்றன.